# "ஞானசேகரன்"

## - நாதக் காவியம் -



காப்பியக் கதிரோன், முனைவர்

**முகைதீன் அனஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானசேகரன்

## நாதக் காவியம்

**காப்பியக் கதிரோன்**

**முனைவர் முகைதீன் அனஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | ஞானசேகரன் நாதக் காவியம் |
| **விடயம்** | : | காவியம் |
| **ஆசிரியர்** | : | எம்.எம்.ஏ. அனஸ்<br>(தொடர்புகளுக்கு 0776288299) |
| **வெளியீடு** | : | உமர் நெய்ணார் புலவர் கழகம்<br>மூதூர் |
| **முதற்பதிப்பு** | : | 2024 ஜனவரி |
| **தட்டச்சு** | : | முஸ்ரிக் முபாரிஸ் |
| **தளக்கோளம் மற்றும் அட்டை வடிவமைப்பு** | : | ஏ.ஆர்.பிரிண்டர்ஸ், திருமலை |
| **பிரதிகள்** | : | 500 |
| **ISBN** | : | 978 - 624 - 99564 - 1 - 4 |
| **விலை** | : | 400/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

என் இலக்கி ய பயணத்தின் மற்றுமோர் அறுவடையாக "ஞானசேகரன் நாதக்காவியம்" எனும் காவிய நூலை வெளியிடுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

மானுட சமூகத்துள் உன்னதமான மனிதர்களை உலகிற்கு இலக்கிய வடிவமாய் அரங்கேற்றும் என் காரியத்தில் ஓர் அங்கமாக இன்று இந்த காவிய நூல் அமைகின்றது. ஓர் தனி மனிதனாக திரு. ஞானசேகரன் அவர்கள் செந்தமிழின் உயர்ச்சிக்காகவும், வளர்ச்சிக்கா கவும் ஆற்றிய, ஆற்றிக் கொண்டு வருகின்ற அளப்பரிய பங்களிப்புக்களைக் கண்டு பெரிதும் ஆனந்தமடைகின்றேன்.

அவரின் தமிழ்ப் பணிகளைப் பற்றி அறிகின்ற போதில் அவர் மீது அதிக பற்றும் பக்தியும் என் மீதில் அதிகரிக் கின்றது. இத்தகைய பெருமனிதனுக்கு நான் செய்யும் கைமாறு தான் இந்தக் காவியமாகவும் இருக்கின்றது. வையத்தில் என் வாழ்வு வளமாய் இருக்கும் காலமெல்லாம் என் எழுத்தப் பணியும் என் பேனாவும் உன்னத மனிதர்களின் உயர்ச்சிகளையெல்லாம் காவியமாக எழுதிக் கொண்டே இருக்கும்.

ஓர் எழுத்தாளன் அதிகம் எழுதக்கூடாது. அவன் ஆக்கங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே அமையவேண்டும் எனச் சிறுபிள்ளைத்தன விமர்சனத்திற்கு ஆட்பட்ட நான் பல நூற்றுக்கணக்கான படைப்புக்களை நூல்களாக வெளியிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற தீராத வாஞ்சையுடன் இருந்து கொண்டிருக்கின்றேன். இதுவரை சுமார் முப்பத்தைந்து நூல்களை வெளியிட்டுள்ள நான் என் படைப்புக்கள் முந்நூற்றி ஐம்பது (350) ஆகக்கூடாதா? என்று என் உளத்துள் ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் என் வாஞ்சையை நிறைவேற்ற வேண்டும் என்றும் பிராத்திக்கின்றேன். திரு.ஞானசேகரன் அவர்களின் வரலாற்றை சிறு காவிய நூலாய் தந்துவிட்ட திருப்தியுடன் முடிக்கின்றேன்.

நன்றி

மட்டக்களப்பு வீதி,
பெரியபாலம்,
மூதூர்-05
தொலைபேசி -0776288299

காப்பியக் கதிரேசன் முனைவர்
முகைதீன் அனஸ்
03-01-2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாகித்ய ரத்னா புகழ்
# டாக்டர் ஞானசேகரன்

பெயரோடு புகழும் இணைந்து வருவது இயல்பு பெயரிலிருந்தே இலக்கியமும் இணையரும் பெற்றிருக்கும் அற்புதம் டாக்டர் ஞானசேகருக்கு மட்டுமே வாய்த்திருக்கிறது. 2000 தொடக்கம் 2024 ஜனவரி வரையில் ஞானம் சஞ்சிகையை தொடராக வெளியிட்டு 284 வது இதழையும் தமிழுலகுக்கு பகிர்ந்த வண்ணமே தமிழ் பணியாற்றிக் கொண்டிருக்கும் இவர் ஞானம் பதிப்பகம் மூலம் 60 நூல்களையும் வெளிக்கொணர்ந் திருக்கிறார். ஞானத்தினூடே ஈழத்துப் போர் இலக்கியம், ஈழத்து நவீன இலக்கிய வெளி, அருள்வாக்கி அப்துல் காதர் நூற்றாண்டு சிறப்பிதழ், ஞானம் பரிசுச் சிறுகதைகள் என எண்பத்து நான்கு பெருந்தொகுப்புக்களை வெளிக் கொணர்ந்தமையினூடே ஞானம் என்பது சாதரண சஞ்சிகையல்ல என்பதைப் புலப்படுத்தி நிற்கிறார்.

ஞானசேகரன் அவர்கள் தொழிலால் ஒரு மருத்துவர் எனினும் ஆன்மாவும் ஆசையும் தமிழ் கூறும் நல் உலகுக்கு சேவை செய்வதே என மங்கா புகழ் பெற்று துலங்குகிறார்.

1964 இல் பிழைப்பு எனும் சிறுகதையுடன் ஏற்பட்ட இலக்கிய பிரவேசம் காலதரிசனம், அல்சேசனும் பூனைக்குட்டியும் ஆகிய சிறுகதைத் தொகுதிகளையும், குருதி மலை 1977(தேசிய சாகித்ய விருது), வலயத்துச் சிறையில், கவ்வாத்து, புதிய சுவடுகள் (தேசிய சாகித்ய விருது), எரிமலை(கரிகாற்சோழன் விருது) என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துச்சாதனை படைத்துக் கொண்டே இருக்கும் இவரதுஇலக்கிய பயணம் சிறுகதை, நாவல், சஞ்சிகை, பயண இலக்கியம், நூல் வெளியீடு, ஆய்வு, ஆய்வரங்கம், இலக்கிய செயற்பாட்டு ஒருங்கிணைப்புக்கள் என்று பல் பரிமாணங்களிலும் பிரகாசித்து நிற்பதை உலகே அறியும். இதில் டாக்டர் ஞானசேகரன் அல்சேசனும் பூனைக் குட்டியும் என்ற சிறுகதை தொகுதி 2000 ஆம் ஆண்டி லிருந்து சப்ரகமுவ பல்கலைகழகத்தில் கலைமாணி சிறப்பு கற்கைக்கான பாடநூலாக வைக்கப்பட்டுள்ளமை இவரது எழுத்தின் அங்கீகாரமாகும். அத்தோடு குருதி மலை எனும் மலையக நாவல் தமிழ்நாடு அமெரிக்கன் பல்கலைக்கழக கல்லூரியில் முதுமாணிப் பட்டத்திற்கான பாடநூலாக விளங்குவதோடு, எத்தனையோ பல்கலைக்கழக மாண வர்கள் இவரது எழுத்தாக்கங்களை ஆய்வுக்குட்படுத்தி பட்டங்கள் பெற்று வருகின்றமையும் மனங்கொள்ளத் தக்கது. இதனால் இவரது எழுத்துக்கும் இயக்கத்துக்கும் கிடைத்த விருதுகள் ஏராளம். கொடகே விருது, மத்திய மாகாண சாகித்ய விருது, தேசிய சாகித்ய விருது, கரிகாற்சோழன் விருது என தொடரும் விருதுகளில் இலங்கையின் அதி உயர் விருதான சாகித்ய ரத்னாவையும் இவர் எட்டிப் பிடித்துள்ளமை இன்னும் சிறப்பாகும். எண்ணிலடங்கா நற்சான்றுகள் பெற்றுள்ள ஞானசேகரன் அவர்களின் வாழ்க்கை வரலாறு இலக்கிய உலகில் ஒரு காவியமாக்கப்படல் காலத்தின் கட்டாயமாகும். இதனை சாலப் பொருத்தமாக காப்பி கதிரேசன் முனைவர் முகைதீன் அனஸ் ஆக்கி தந்திருக்கிறார்.

செல்வ நாயகத்தின் சீர்மை காவியம் படைத்த பெரும்புலவன் அனஸ் ஞானசேகரனின் நாதகாவியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்து நற்றமிழுக்கு வளம் சேர்த்திருக்கிறார். ஞானசேகரனின் நற்பணியைப் பாடும் இக்காவியத்திலே,

மத்திய மாகாண சாகித்ய விருதை மாண்புடனே பெற்றே தான் மிளிர்கின்றதாக உத்தமராம் இவருடைய லயத்துச் சிறை நாவல் உயர்ச்சி மிகு குருதி மலை (நாவல்) உள்ளதும் உணர்வீர்.

குருதி மலை நாவலினை கொடகே நிறுவனமும் காத்திரமாய் மொழிபெயர்த்து வெளியிட்டதன்றோ சிறப்புறவே சிங்களத்தில் மொழிப் பெயர்க்கப்பட்டு சங்கமமாகிட்ட சங்கதியும் புரிவோம் என்கின்றார்.

இரு பாசை என்றே தான் இலங்குகிறதான இங்கிலீசு சிங்களத்து மொழிகளிலே இதனை சிறப்புறவே கொடகே நிறுவனம் வெளியிட்டதம்மா சிந்தை கவர் நூல் என்ற சிறப்பு இதற்கன்றோ.

என தமிழ்த்தேனில் ஊறவைத்த சுளைகளாய் சொற் கோத்திருக்கும் புலவரின் வார்த்தைக்கு மிகப் பொருத்தமானதாய் டாக்டர் ஞானசேகரனின் இலக்கிய பணிகள் இலங்குகின்றன.

இலங்கையதன் அரசினதும் இலங்கும் உயர் விருதாய் இருக்கின்ற சாகித்ய ரத்னா எனும் விருதை துலங்குகிற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தான் வழங்கப்பெற்றிட்ட தகுதியதும் கொண்டார்.

எனப்போற்றி எண்சீர், அறுசீர், அகவல் மரபுகளில் சுமார் 176



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளைப்பாடி

ஞான சேகரனின் காவியத்தை நவிழ்வோரும் வாழி
நன்றனவே அவர் பெருமை நினைப்போரும் வாழி !
ஆனபெரும் அவர் பணிகள் அதிசிறந்தது வாழி !
அவராலே தமிழ் மொழியும் அதி உயர்ந்து வாழி !

என வாழ்த்துப் பாமாலை சூடுகிறார். காப்பியக் கதிரோன் அனஸ் அடுக்கடுக்காய் அள்ளித்தெளித்திருக்கும் அத்தனை வரிகளும் ஞானத்தின் மீது விழும் சுப சோபனமாய் கொண்டு, என் போன்ற எழுத்தாளர்களுக்கும் களமாய் வந்த ஞானம் சஞ்சிகை தந்து, ஞாலத்தில் புகழ் பெற்று விளங்கும் ஞானசேகரனின் பணிகள் இன்னும் சிறக்க இனிது வாழ்த்துகிறேன்.

வரவாற்று ஆய்வாளர்,
மாத்தளை ஜெஸீமா ஹமீட்.
BA(Hon's), MA(History), PGDE, LECTURER (B.ED)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானசேகரன் - நாதக் காவியம்.

1. உன்னதமாம் மனிதர்தம் உயர்வாழ்வு யாவும்
உயரியதாம் போதனையாய் உலகினிலே ஓங்கும்
இன்னதனால் ஞானசேகரன் இவர்வாழ்வும் இங்கு
இனிதுறவே இலங்குமென இதயத்தே கொண்டேன்.

2. ஆதலினால் அவர்பற்றி அருந்தமிழ்க்கா வியத்தை
ஆக்கிட வே ஆவலதும் அதிகமெனக் கொண்டேன்.
நீதமிகு அவர்வாழ்வு நிலைத்தோங்கும் வண்ணம்
நவில்கின்றேன் நானுமிதை நன்குடனே கேட்பீர்.

3. தமிழ்மொழியைத் தாய்மொழியாய்த் தான்கொண்டு வாழ்வோர்
தக்கபடி அதுஉயரத் தான் உழைத்தல் வேண்டும்.
தமதான இக்கடனைத் தனிச்சிறப்பாய்ச் செய்து
திகழ்கின்றார் ஞானசேகரன் தெரிந்திடுவீர் தானே!

4. திக்கெல்லாம் ஞானமெனும் சஞ்சிகையின் மூலம்
தமிழ்வளர்க்கும் தாரகையாய்த் தாய்நாட்டில் திகழும்
மக்கள்மனம் நிறைந்திட்ட ஞானசேகரன் தன்னை
மாண்பாக மொழிவதிலே மகிழ்வேதான் காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நாட்டினது நாற்புறமும் ஞானசஞ்சிகை தன்னால்
நற்றமிழின் நறுமணத்தை நன்றெனவே பரப்பி
ஏட்டினிலே புகழ்ச்சிதனை ஏராளம் பெற்ற
ஏந்தலராம் ஞானசேகரத்(தை) எண்ணிடுவோம் நன்கு.

6. ஞானகேரம் வாழ்வதனை நன்றாம்கா வியமாய்
நான்பாட நாயகனே நல்லருளைச் சொரிவாய்.
ஆனபெரும் ஆழியென அனஸ்எந்தன் நாவும்
ஆகிவிடத் தமிழினிலே அருள்தனையும் சொரிவாய்.

7. ஞானசேகரன் தனையானும் நவில்கின்ற கவியில்
நேராது பிழையேதும் நேர்த்தியுடன் அமைய
ஆனபெரும் உதவியையும் ஆதியிறையே அருள்வாய்
அழகுமிகு காப்பாயும் ஆகிடுவாய் இதற்கு.

8. கல்விதனின் கருவிடமாய்க் கலைகட்டி ஓங்கும்
கனபுகழின் யாழ்நகரின் கீர்த்தியதோ மேன்மை
சொல்லரிய மகிமைகளின் சொர்க்கபுரி என்றும்
சிறப்புற்றுத் திகழுமிதைச் சிந்தையிலே நிறைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பனையுடனே பயிர்வளமும் பாங்குடனே அமைந்து
பெரும்செல்வம் புலர்கின்ற பூமியிது அம்மா!
இணையில்லா ஊர்என்றே இன்புற்றுத் திகழும்
இப்பதியாம் யாழ்நகரை இதயத்தே கொள்வீர்.

10. தியாகராசா ஐயரவர் தந்தையென ஆக
தாய்எனவே பாலாம்பிகை தனிப்பேறும் காண
உயரியராம் மைந்தன்என ஞானசேகரன் உலகே
உதித்திட்ட உன்னதமும் உரித்தாகப் பெற்றார்.

11. ஆயிரத்தித் தொழாயிரத்தி ஆனநாப்பத் தொன்றின்
அதன்சித்திரை பதினைந்தாம் அருந்தேதி தன்னில்
தூயபெரும் சிந்தனையின் ஞானசேகரன் அவரும்
தரைமீதில் தரித்திட்ட தத்துவமும் கொண்டார்.

12. ஆரம்பக் கல்விதனை அன்னவரும் அன்று
அரசினர்தமிழ் கலவன் பாடசாலை மற்றும்
சீரியதாம் மெதடிஸ்ட்ஆங் கிலப்பள்ளி தனிலும்
சிறப்புறவே புன்னாலைக் கட்டுவனில் கற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பின்னவரும் உரும்பராய்இந் துக்கல்லூரி தனிலும்
பாங்குறவே கற்றிட்ட பாக்கியமும் பெற்றார்.
நன்றெனவே கல்வியிலே நாட்டமதும் கொண்ட
நபராகத் திகழ்ந்திட்ட நாயகரும் ஆவார்.

14. இதன்பின்னே இலங்கையதன் மருத்துவக்கல் லூரி
இன்னதிலும் கற்றிட்ட இதிகாசம் கொண்டார்.
இதனடுத்து வெளிநிலையாய்க் கலைமாணிப் பட்டம்
இனிதுறவே பெற்றவராய் இலங்குகிறார் அன்றோ!

15. மலையகத்துப் பகுதியிலே மிகநீண்ட காலம்
மருத்துவராய்ப் பணிசெய்த மகத்துவமும் பெற்றார்.
கலைத்துறையில் ஆர்வமது கூடியதாய்க் கொண்ட
கீர்த்தியிலே இவரின்று கால்பதித்தும் கொண்டார்.

16. இலக்கியத்து ஆற்றலிலே இன்னரிய இடத்தில்
இவரிருக்கும் நிலையினையும் இயம்பியே மகிழ்வோம்.
பலவான துறைகளிலும் புலமையது பெற்ற
பெருமைக்கும் உரியாராய்ப் புலர்கின்றார் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. சிறுகதைகள் யாப்பதிலும் சிறப்பிடமே கொண்டார்
சிறுகதைநூல் மூன்றதனை சிறப்பாய்வெளி யிட்டார்.
அருமைமிகு கருத்தெல்லாம் அவர்கதையில் ஓங்கும்
அக்கதைகள் இலக்கியத்தில் அதிசிறப்பாய்த் திகழும்.

18. அல்சேசனும் ஒருபூனைக் குட்டியும்சிறு கதைநூல்
ஆனபெரும் சிறப்புற்று சப்ரகமுவ பல்கலை(யில்)
நல்லதொரு பாடநூலாய் நிலைத்ததையும் புரிவீர்
நாட்டிலிவர் உயர்ச்சிக்கு நற்சான்றே ஈது.

19. கொடகேஎனும் நிறுவனமும் இவர்கதைகள் பத்தை
காத்திரமாய் மொழிபெயர்த்து "பரதேசித்" தலைப்பில்
வடிவாகச் சிங்களத்தில் வெளியிட்ட நிகழ்வும்
விளக்கிறதே இவருடைய வல்லமையை எமக்கு,

20. இதுவரையில் இவருடைய நாவல்களோ ஐந்து
இன்னரிய நூல்கள்என இங்கான தம்மா!
புதுவகையாம் போக்கினிலே புலர்ந்துள்ள ஈது
புரட்சிமிகு மாற்றமதாம் இலக்கியத்தில் புரிவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. இவருடைய நாவல்களாய் இனிதுறவே ஆன
இலட்சியத்துக் குருதிமலை புதியசுவடு(கள்) என்ற
கவர்ச்சிமிகு இருநூல்கள் தேசியசா கித்திய
காத்திரமாம் விருதினையும் கண்டதுவே அம்மா!

22. மத்தியதாம் மாகாண சாகித்திய விருதை
மாண்புடனே பெற்றேதான் மிளிர்கின்ற தாக
உத்தமராம் இவருடைய லயத்துச்சிறை நாவல்
உயர்ச்சிமிகு குருதிமலைநா(வல்) உள்ளதுவும் உணர்வீர்.

23. குருதிமலை நாவலினை கொடகேநிறு வனமும்
காத்திரமாய் மொழிபெயர்த்து வெளியிட்ட தன்றோ.
சிறப்புறவே சிங்களத்தில் மொழிபெயர்கப் பட்டு
சங்கமமாய் ஆகிட்ட சங்கதியும் புரிவோம்.

24. மதுரையதன் அமெரிக்கப் பல்கலைக்கழ கத்தில்
முதுமாணிப் படிப்புக்காம் பாடநூல் ஆக
இதுஓராண்(டு) திகழ்ந்திட்ட இதிகாசம் புரிவோம்.
இத்தகைய மேன்மைக்கும் இருப்பிடமாம் இவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. "எரிமலை"எனும் ஏற்றமிகு நாவலையும் எழுதி
ஏராளப் புகழினையும் எட்டிட்டார் இவரும்.
புரிதலுடன் இவருடைய புலமைதனை எல்லாம்
புரிந்தேதான் பூரிப்பும் பாரியதாய் அடைவோம்.

26. "எரிமலை"யாம் நாவல் இது ஏராளம் சிறப்பும்
எட்டிட்ட நிலையினையும் எண்ணத்தே கொள்வோம்.
உரிமையென கொடகேவிரு தில்உயர்ந்த இதுவோ
உயர்படைப்பு என்பதையும் உவகையுடன் உரைப்போம்.

27. இருபாசை என்றேதான் இலங்குகிற தான
இங்கிலிசு சிங்களத்து மொழிகளிலே இதனை
சிறப்புறவே கொடகேநிறு வனம்வெளியிட் டதம்மா
சிந்தைகவர் நூல்என்ற சிறப்புஇதற் கன்றோ.

28. கரிகாற்சோ(ழன்) என்னும் காத்திரமாம் விருது
கிட்டியதாம் நூல்என்ற கீர்த்தியது கொண்டு
எரிமலையாம் இந்நாவல் ஏற்றமுற்ற தான
ஏராள சங்கதியும் என்றுமிவர் சொந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. இதுவரையில் தமிழுக்கு இருபத்தி மூன்று
இன்னரிய நூல்களினை இவர்தந்தும் உள்ளார்.
புதுமைமிகு புலமையுடன் புலர்கின்ற இந்நூல்
புவிதனுக்கே பொக்கிஷமாய்ப் புரிவோமே நாமும்.

30. பல்வேறு நாடுகட்கும் பயணமது செய்த
பரிட்சயமும் கொண்டவராய்ப் புலர்கின்றார் நன்கு,
நல்லபெரும் இலக்கியமாய் பயணத்தை எல்லாம்
நூலாக யாத்திட்ட நற்சிறப்பும் பெற்றார்.

31. அவுஸ்திரேலிய வடஇந்திய ஐரோப்பிய லண்டன்
அதனுடனே கனடாவென ஆனபெரும் நாட்டின்
உவப்புமிகு பயணத்தை உன்னதமாம் நூலாய்
உயர்தமிழில் யாத்திட்ட உயர்ச்சியதும் கொண்டார்.

32. ஈர்பத்துடன் மூன்றாண்டாய் இவர்ஞானம் என்னும்
இலக்கியத்து சஞ்சிகையை வெளியிட்டு வாரார்.
பேர்புகழும் இதனாலே பெரிதுறவே பெற்று
புலர்கின்ற பெரியாராய்ப் புரிந்திடுவோம் இவரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. இதுவரையில் ஞானஇதழ் சஞ்சிகையே என்று
இருநூற்றி எழுபதினை எட்டியுள தன்றோ!
இதுஇன்று இலங்கைக்கும் இவ்வுலகத் தமிழின்
இலக்கியத்தின் இணைப்பாயும் இருப்பதுவும் காணீர்.

34. மாதம்தோ றும்மாண்புடன் மலரும்ஞா னம்இதழ்
மகத்தான இலக்கியமாய் மக்கள்மனம் உளது.
ஆதலினால் நன்றிகளை அதிகம்என நாமும்
அளித்திடுவோம் ஞானசேகரன் அருமாந்தர் தனுக்கு.

35. நாட்டினிலே பல்பத்து நல்லரும்எழுத் தாளர்
நிகரில்லா ஓவியரை உருவாக்கிய பெருமை
ஈட்டிட்ட புகழினிலே இவ்ஞான சஞ்சிகை
இருக்கின்ற நிலைதனையும் இனிதுறவே காண்பீர்.

36. ஈழத்துப் போர்இலக்கியம் இன்னதனை இயம்பிய
இதிகாசம் கொண்டதுவாய் இருக்கிறதே ஞானம்.
ஆழமிகு பார்வையுடன் அனைத்தையுமே நோக்கும்
ஆற்றலது பெற்றதுவும் அச்சஞ்சிகையே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. புலம்பெயர்வின் இலக்கியத்தைப் பகன்றிட்ட பெருமை
பெற்றதுவும் ஞானமதாய்ப் பகர்வோமே நாமும்.
இலக்கியத்துப் புதுமைகளை இயம்பும்சா தனமாய்
இதுவேதான் இருப்பதையும் இதயத்தே கொள்வோம்.

38. புலம்பெயர் இலக்(கியம்), போர் இலக்கியம் போன்றவைகள் யாவும்
பெரும்வரலாற்(றைப்) பகர்கின்ற பதிவுகளும் அன்றோ.
துலக்கமுற இன்னதுவும் தருகின்ற தெளிவு
தூய்தான தென்றேதான் துணிந்துரைப்போம் நாமும்.

39. இலங்கையிலே இலக்கியத்தில் இன்னரிய இடத்தில்
இலங்குகிற அறுபதுபேர் இவர்களுடை பேட்டி
துலங்குகிற ஞானத்துச் சஞ்சிகையும் பாரீர்.
தரமான விடயமிதாய் தான்இதுவும் உளதே!

40. அருள்வாக்கி அப்துல்காதிர் ஆனபெரும் புலவர்
அவர்பற்றி வரலாற்றை அதிகமுறப் பகன்று
சிறப்புற்ற ஞானமெனும் சஞ்சிகையின் அருமை
செகமீதில் உயர்வென்றும் சாற்றிடுவோம் நன்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. இலங்கையிலே சிறுகதைகள் கவிதையுடன் ஆய்வும்
இனிதுறவே வளர்ச்சியுற இயன்றபணி செய்து
இலங்குகிற சஞ்சிகையாம் ஞானத்தின் உயர்வை
இயம்பிடவும் ஒண்ணாது இருக்கிறதே அம்மா.

42. இந்தியாவில், இலங்கையிலே பல்கலைக்கழ கத்தில்
இனிதுறவே கற்கின்ற மாணவர்கள் சிலபேர்
சிந்தையுடன் ஞானமெனும் சஞ்சிகையை ஆய்ந்து
சிறப்புமிகு பட்டத்தைப் பெற்றதுவும் புரிவீர்.

43. ஞானமெனும் பதிப்பகத்தின் மூலமவர் நூல்கள்
நிறையவேதான் வெளியிட்ட நேர்த்தியதும் கொண்டார்.
ஆனபெரும் பணியெல்லாம் அழகுறவே ஆற்றி
அருந்தமிழை அதிகமென அவர்வளர்த்தார் அறிவீர்.

44. மேலுமிவர் ஞானம்இலக்(கிய) பண்ணைஎனும் அமைப்பை
மாண்புடனே உருவாக்கி மகத்தான பணிக்கு
காலமெலாம் உதவுகிற காரியத்தில் உள்ளார்.
கண்டிடுவீர் இவர்பணியைக் கரிசனையாய்த் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. இலக்கியத்து விழாக்களையும் இனிதுறவே நடாத்தி
இன்தமிழின் உயர்ச்சிக்கு இவர்வழியும் ஆனார்.
பலவான நூல்களையும் வெளியீடு செய்து
பைந்தமிழும் போற்றுகிற பெரியாராய் ஆனார்.

46. அத்துடனே தமிழுக்காய் அயராது உழைத்த
அரியபெரும் மனிதர்க்கும் அவர்விழாவே செய்தார்.
வித்தகர்கள் இவர்களுக்குக் கௌரவிப்பும் அளித்து
வளமான பணிகளுக்கு வித்தாயும் உள்ளார்.

47. மறைந்திட்ட பெரியார்தம் மொழிப்பணிகள் போற்றி
மகத்தான விழாநடத்தும் மாந்தர்என உள்ளார்.
நிறைவான ஞானமெலாம் நிறைந்திட்ட இவரை
நற்பேறாய்ப் போற்றியேதான் நாம்மகிழ்வும் காண்போம்.

48. பயிற்சிப் பட்டறைகள்பல(தை) பாங்குடனே இவரும்
பைந்தமிழின் உயர்ச்சிக்காய் புரிந்தவராய் உள்ளார்.
உயர்ச்சியுறு பணியெல்லாம் உன்னதமாய் ஆற்றும்
உத்தமரே இவரென்றும் உரைத்தேதான் மகிழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. செந்தமிழின் சிறப்பெனவே சர்வதேச ரீதியில்
சீரியதாம் மாநாடு ஆய்வரங்கு போன்ற
விந்தைமிகு பலநிகழ்வில் சங்கமமே ஆன
வரலாறும் கொண்டவராய் விளங்குகிறார் தானே!

50. இலங்கையதன் கலாபூசணம் இவ்விருதைப் பெற்று
இலங்குகிற நபராக இவருயர்ந்தும் உள்ளார்.
பலவான ஆற்றலிலும் பரிணமித்து ஓங்கும்
பெருமாந்தர் இவரென்றும் பகர்வோமே நாமும்.

51. சாகித்திய ரத்னாவெனும் சிறப்பான விருதில்
சஞ்சரிக்கும் தன்மையதும் தான்கொண்டே உள்ளார்.
தாகமெலாம் தமிழ்மொழியில் திறம்படவே கொண்ட
தன்மையிலும் மிகைத்தவராய்த் திகழ்கின்றார் அன்றோ.

52. அகிலஇலங்(கை) சமாதான நீதவான்எனத் திகழும்
ஆனபெரும் உயர்ச்சியிலும் அவர்திகழு கின்றார்.
நிகரில்லாப் புகழதனில் நிலைத்திட்ட இவரை
நற்றமிழின் பேறெனவே நாம்போற்றி மகிழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. பல்வேறு இலக்கியத்து நிறுவனங்கள் மூலம்
பல்பத்து விருதுடனே கௌரவமும் பெற்றார்.
சொல்லவொணாச் சிறப்புக்கும் சொந்தமென ஆன
சீர்மைநிறை ஞானசேகர(னை) சிந்தையிலே நிறைப்போம்.

54. கொழும்பினது தமிழ்ச்சங்கம் இன்னதிலும் நல்ல
காத்திரமாம் பதவிகளில் கால்பதித்தும் உள்ளார்.
தமிழ்வளர்க்கும் பணியெல்லாம் தரமாக இதனால்
தான்ஆற்றி மகிழ்ச்சியுறும் தத்துவமும் கொண்டார்.

55. புன்னைநகர் நலன்புரிச் சங்கத்தில் அவரும்
பாங்கான தலைவர்எனும் பதவியிலும் உள்ளார்.
நன்றான பணியெல்லாம் நிறையவேதான் ஊர்க்கு
நல்குகிற நபராயும் நிலைகொண்டு உள்ளார்.

56. சர்வதேச எழுத்தாளர் ஒன்றியத்தின் இலங்கை
சிறப்புமிகு இணைப்பாளர் பதவியிலும் உள்ளார்.
அர்ப்பணிப்பாய் பணியாற்றி அருந்தமிழை வளர்க்கும்
ஆனபெரும் சிறப்புக்கும் அணியென்றும் ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. இலங்கைஎழுத் தாளர்களின் தேசியதாம் அமைப்பின்
இன்னரிய உபசெயலா(ளர்) இப்பதவியில் இருந்து
பலவாறு தமிழ்வளர்க்கும் பணியினிலும் ஆன
பாங்கான சேவகனாய்ப் புலர்கின்றார் தானே!

58. பல்வேறு சஞ்சிகையும் பாங்குடனே இவர்க்குப்
பரிசளிக்கும் பாங்குடனே முன்அட்டைப் படமாய்
வல்லவராம் ஞானசேகரன் தனைப்பிரசுரம் செய்த
வளமான நிகழ்ச்சியதும் வையத்தே ஓங்கும்.

59. இலங்கையதன் சஞ்சிகையாய் இலங்குகிற மல்லிகை
இதனுடனே கொழுந்துஅகம(து) படிகள்இவை போன்றவை
துலக்கமுற இவர்படத்தை அட்டைப்பட மாக
துலங்கவேதான் செய்ததையும் தான்மகிழ்வாய்ச் சொல்வோம்.

60. தமிழகத்துச் சஞ்சிகையாம் ஏழைதாசன் மற்றும்
தூரத்து நாடான ஜேர்மனியின் “மண்”எனும்
கமழ்கின்ற சஞ்சிகையும் களிப்புடனே இவரின்
காத்திரத்துப் படத்தைப்பிர சுரித்ததுவும் புரிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. இலங்கையதன் கலாச்சாரப் பேரவையும் நடாத்திய
இன்னரிய சிறுகதையின் போட்டியிலே நாட்டில்
இலங்கியேதான் முதலிடத்தில் பிரதமராம் ஸ்ரீமாவோ
இவராலே கௌரவமும் இனிதுறவே பெற்றார்.

62. மாண்புமிகு ஜனாதிபதி மைத்திரிபா(ல) சிறிசே(ன)
மூத்தஎழுத் தாளர்எனும் மேலான விருதை
கண்ணியமாய் இவருக்குக் கொடுத்திட்ட நிகழ்வும்
காலமெலாம் கதைபொருளாய்க் காட்சிதரும் அம்மா!

63. பேராதனைப் பல்கலைக்கழ கத்தாலும் இவர்க்கு
பாங்கான துணைவேந்தர் உப்புல்திஸா நாயக்க
ஆரமென கௌரவத்தை அங்களித்தார் அன்றோ!
அவர்கண்ட மகிமையெலாம் அறைந்திடவும் ஒண்ணா.

64. கண்டித்தமிழ் சங்கத்தின் காத்திரமாம் விருதாம்
கீர்த்திநிறை வித்தகர்விரு(தை) பெற்றவரும் ஆவார்.
மண்ணினிலே இவர்பெற்ற மகிமையதோ மிகைத்து
மகத்தான மனிதருக்கும் மாசான்றாய் உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. சிங்களதமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் உடைய
சிறப்புமிகு மூத்தபடைப் பாளிக்கௌ ரவத்தை
இங்கினிதே பெற்றிட்ட இதிகாசம் கொண்டார்.
இன்னரிய சிறப்புக்கும் இருப்பிடமாய் உள்ளார்.

66. கொழும்பின்கம் பன்கழக கௌரவிப்பே என்று
கனேசையர் எனும் வித்துவான்விரு(து) வனப்புடனே பெற்றார்.
அழகுமிகு ஆற்றல்களின் அடைக்கலமே என்றும்
அவர்திகழும் அதிசயமும் அறிந்திடுவீர் நன்கு.

67. இலக்கியத்து வட்டமதாம் யாழ்நகரின் கௌரவம்
இனிதுறவே பெற்றவரும் இலங்குகிறார் தானே!
இலங்கையிலே தமிழுக்கு இன்பம்என ஆன
இவரைஎங்கள் இதயத்தில் இருத்தியேதான் மகிழ்வோம்.

68. புன்னாலைக் கட்டுவன்தமிழ் கலவன்பா(ட) சாலையின்
பாங்குறுகல் விச்சமூகக் கௌரவிப்பாய் அவரும்
உன்னதமாம் கலைஞான உயர்விருதும் பெற்றார்.
உயரியதாம் புகழெல்லாம் உரித்தெனவே பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69. தமிழகத்துப் பல்கலைக்கழ(கம்) தஞ்சாவூர் அவரும்
திறனான புகழுடனே திகழ்கின்ற முனைவர்
தமிழறிஞர் உதயசூரியன் தலைமையிலே கௌரவம்
தட்டிட்ட பெருமையதும் தனதாகக் கொண்டார்.

70. திண்டுக்கல் காந்திகிரா(மம்) பல்கலைக்கழ கத்தில்
திகழ்கின்ற துணைவேந்தர் முனைவர்நட ராசன்
கண்ணியமாய்க் கௌரவித்த காரியமும் புரிவீர்.
காசினியே இவர்பெற்ற கீர்த்தியதும் அறிவீர்.

71. நாமக்கல் செல்வம்ஆ சிரியர்கல்லூ ரியிலே
நல்லபெரும் கௌரவமும் நிகழ்ந்ததுவே இவர்க்கு
ஆம்அதிகம் புகழுக்கு அருகதையே என்று
ஆகிட்ட அன்னவரை அகத்தினிலே நிறைப்போம்.

72. தமிழ்நாடு உயிர்மைசுஜா(தா) அறக்கட்டளை இதுவும்
தரம்மிக்க சிற்றிதழ்விரு(தை) இவருக்கு வழங்கித்
தமதான கௌரவிப்பில் திகழ்ந்ததுவும் புரிவோம்.
தாய்நாட்டில் தமிழ்வளர்க்கும் தலைமகனாய்ப் புகழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. உலகத்தமிழ் சிற்றிதழ்கள் சங்கமது வழங்கிய
உயர்வுமிகு அறக்கட்டளை விருதினையும் பெற்றார்.
நலமான உயர்வெல்லாம் நாட்டினிலே பெற்ற
நாயகரே என்றேதான் நாம்புகழ்வோம் இவரை.

74. இலங்கையினது உலகஇஸ்லா மியமாநா(டு) தன்னின்
இன்னரிய மூத்தஎழுத் தாளர்விரு(தை) பெற்றும்
இலங்குகிற தன்மையதும் இனிதுறவே பெற்றார்.
இப்படியே இவராற்றல் இங்கதிகம் அம்மா!

75. ஸ்ரீலங்கா முஸ்லிம்மீ டியாபோரம் இதனின்
சிறப்புமிகு கௌரவத்து விருதினையும் பெற்றார்.
காலமெலாம் இவர்புகழும் காத்திரமே என்று
கதைமிக்க மானிடராய் காண்கின்றார் அன்றோ.

76. சித்திலெப்பை ஆய்வுப்பே ரவைதன்னின் விருதை
சிறப்புறவே பெற்றிட்ட செம்மலரும் ஆவார்.
இத்தரையில் இவர்கண்ட விருதுகளோ அதிகம்
இயம்பிடவும் ஒண்ணாமல் இருப்பதுவும் புரிவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. உடதலவின்(ன) மடிகேஇதன் சிந்தனைவட் டத்தின்
உன்னதமாம் இதழியலின் வித்தகர்விரு தினையும்
தடம்பதித்து தனக்கென்று தட்டியவர் ஆவார்.
திறமைக்கு இவர்கண்ட தனிச்சிறப்பே இவைகள்.

78. எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் வாழ்நாள்
ஏற்றம்நிறை சாதனையா ளர்உயர்தமிழ் விருதை
அழகுறவே அடைந்திட்ட ஆளாயும் உள்ளார்.
அதிசயத்து மனிதரிவர் அறைவோமே நாமும்.

79. மலையகத்துக் கலைஇலக்கியப் பேரவையும் அவர்க்கு
மாண்பான கௌரவத்தை அளித்ததுவும் அறிவீர்.
இலங்கையிலே இவர்போன்ற இன்னொருவர் காணல்
இயலாத காரியமே இதயத்தே கொள்வீர்.

80. இலண்டனது உலகத்தமிழ் ஆய்வுமா நாட்டில்
இனிதுறவே கௌரவமும் இவர்பெற்றார் தானே!
உலகினிலே செல்கின்ற இடமெல்லாம் சிறப்பை
உரித்தாகப் பெற்றஇவர் உயர்அதிசயம் என்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81. சுவிஸ்நாட்டின் தமிழ்இலக்கிய சங்கத்தின் நிறைதமிழ்
சுந்தரத்து விருதினையும் சுகந்தமுடன் பெற்ற
இவருடைய ஆற்றல்தனை இன்பமுடன் பகிர்வோம்.
இன்தமிழின் பொக்கிசமாய் இயம்பியேதான் மகிழ்வோம்.

82. அவுஸ்திரேலிய உயர்திணைச்சிந் தனைகளது சங்கம்
அமைப்பினரின் கௌரவத்து விருதினையும் வென்றார்.
புவனத்தே இவர்புகழோ பாரியது என்று
பகர்வதிலும் பேரின்பம் பாங்குறவே காண்போம்.

83. பாரிஸ்இதன் எழுத்தாளர் மன்றமதும் இவர்க்கு
பெரிதுறவே கௌரவமும் புரிந்திட்ட தன்றோ!
ஆரம்எனத் தமிழுக்கு ஆகிட்ட இவரை
அகமெல்லாம் நிறைத்தேதான் ஆனந்தம் அடைவோம்.

84. கலைவிழாவின் நிகழ்வினிலே கௌரவத்தை டென்மார்க்
காத்திரமாய் இவர்க்களித்த காரியமும் புரிவோம்.
உலகெல்லாம் புகழுற்று உன்னததமிழ் பணியில்
உவப்பேதான் காண்கின்றார் உண்மைஇதை உரைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85. கனடாவின் உதயனெனும் பத்திரிகை தன்னின்
கீர்த்திமிகு ஆதரவில் கனடாஅர(சு) சான்றித(ழை)
தனதாகப் பெற்றிட்ட தனிப்பேறும் பெற்றார்.
தமிழுக்காய் வாழுமிவர் தாய்நாட்டின் கொடையே!

86. அவுஸ்திரேலிய தமிழ்இலக்கிய கலைச்சங்கம் அதனுடன்
ஆனபெரும் கன்பராகலை இலக்கியவட்(டம்) இணைந்து
உவகையுடன் இவருக்கு வழங்கிட்ட கௌரவம்
உன்னதமே என்பதையும் உள்ளத்தே கொள்வீர்.

87. கனடாவின் இந்துக்குரு மார்ஒன்றியம் இதனால்
கலாரத்னா விருதுடனே கௌரவிப்பும் இவரின்
கனபுகழைக் காட்டுகிற காட்சியது ஆகும்.
கண்டிடுவீர் ஞானசேகரன் கீர்த்திதனை எல்லாம்.

88. கனடாவின் இலக்கியத்து தோட்டத்து அமைப்பின்
காத்திரமாம் தமிழ்இலக்கிய சாதனையின் விருதை
தனதாகப் பெற்றபெரும் தனிச்சிறப்பும் கொண்டார்.
தமிழுக்குப் பெருமையெனத் தானாகிப் போனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89. பாணந்துறை இஸ்லாமியப் பேரவையும் இவர்க்குப்
பாங்கான கலைக்காவலர் விருதினையும் வழங்கி
மாண்பளித்த வரலாறும் மனதினிலே மதிப்பீர்.
மகத்தான மனிதரிவர் மகிமையதும் புரிவீர்.

90. அருள்வாக்கி அப்துல்கா(தர்) கலைஇலக்கியக் கழக
ஆனதான விருதினையும் அவர்பெற்றுத் திகழ்ந்தார்.
வரலாற்று மனிதரென விளங்குகிற இவரை
வாயாற வாழ்த்துவதில் வனப்பேதான் காண்போம்.

91. இலங்கையதன் அரசினது இலங்கும்உயர் விருதாய்
இருக்கின்ற சாகித்திய ரத்னா எனும் விருதை
துலங்குகிற ஜனாதிபதி ரணில்விக்ர மசிங்க
தான்வழங்கப் பெற்றிட்ட தகுதியதும் கொண்டார்.

92. தமிழ்நாடு திருச்சியின் இனியநந்தவ(ன) வாசகர்
தனிப்பெரும் வட்டமது இதழியல்மா மணிஎனும்
தமதுயர்வுறு விருதினையும் வழங்கியதும் புரிவீர்
தரமான விருதெல்லாம் நாடியதே இவரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93. தஞ்சாவூர் தமிழ்பல்கலைக் கழகமது இவரின்
தரம்மிக்க எரிமலையின் நாவலுக்கு நல்ல
விஞ்சியதாம் புகழ்மிக்க கரிகாற்சோ(ழன்) விருதை
வழங்கிட்ட நிகழ்வினையும் வாஞ்சையுடன் பகர்வோம்.

94. தமிழ்நாடு திருச்சியதன் ஏகத்துவ மெய்ஞா(ன)
தமிழ்ச் சங்கம் இவருக்கு கௌரவிப்புச் செய்த
அழகுநிறை நிகழ்வினையும் அறைந்தேதான் மகிழ்வோம்.
அவர்திறமை அத்தனையும் அரும்சிறப்பே என்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு
## (அகவல்)

95. ஞான சேகரம் என்கின்ற
நரரை நாமும் நினைக்கையிலே
ஆன பெரிய மகிழ்வேதான்
அகத்தில் எமக்கு வருகிறது.

96. செந்தமிழ் மொழியின் செழுமைக்குச்
சிறப்பாம் அவரின் சேவைகளை
விந்தை என்றே காண்கின்றோம்.
வியப்பில் ஆழ்ந்து போகின்றோம்.

97. ஆறு பத்து ஆண்டுகளாய்
அழகு தமிழின் உயர்ச்சிக்காய்
பாரில் பணிகள் ஆற்றுமிவர்
பாங்கைப் பார்த்தே வியக்கின்றோம்.

98. யாழின் மண்ணில் மலர்ந்தஇவர்
யாழாய்த் தமிழில் தழைத்துள்ளார்.
வாழும் வாழ்வால் வையத்தே
வரலா லென்றே விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

99. படித்துப் பட்டம் பெற்றஇவர்
பாங்காய்த் திட்டம் தீட்டுமிவர்
நெடிய புகழில் நிலைத்துள்ளார்
நிலமும் வியக்க உயர்ந்துள்ளார்.

100. ஆற்றல் அதிகம் பெற்றதனால்
அதிகம் நூல்கள் ஆக்கியுள்ளார்.
ஏற்றம் என்ற சொல்லுக்கு
ஏற்ற மனிதர் இவரானார்.

101. யதார்த்தம் நிறைந்த காதைகளை
யாவரும் வியக்க யாத்துள்ளார்.
அதனால் விருதும் அவரிடத்தே
ஆகி மகிமை உற்றதுவே.

102. மருத்துவர் என்றே ஆனதனால்
மானிட நோயும் அறிந்துள்ளார்.
சிறந்த எழுத்தும் வாய்த்ததனால்
சிந்தை தனையும் தூண்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

103. சிங்களம் ஆங்கிலம் ஆகியதாம்
சகோதர மொழிகளில் இவர்கதைகள்
பங்கமி(லா) மொழிபெயர்ப் பானதனால்
பலனாம் மனித மேன்மைக்கு.

104. ஈர்பத் தாண்டு காலங்கள்
இனிதுற ஞானம் சஞ்சிகையும்
பேர்பெற் றிலங்கும் பெருமைக்கும்
பெரியார் இவரே காரணமாம்.

105. உன்னத மாந்தர் ஆனவர்தம்
உயரிய பணிகள் பற்றியெல்லாம்
நன்றென எடுத்து உரைக்கின்ற
நன்றாம் சஞ்சிகை ஞானமாகும்.

106. உலகின் பலவாம் நாடுகட்கும்
உயர்வைத் தமிழின் நோக்காக்கி
நலவாம் பயணம் செய்கின்றார்.
நன்றாம் பணியில் திகழ்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

107. இந்திய நாட்டுத் தமிழகத்தில்
இயம்பும் போதில் ஞானசேகரனை
செந்தமிழ் உணர்வில் அங்குற்றோர்
சிந்தை மகிழ்வு அடைகின்றார்.

108. இப்படி ஒருவர் தமிழுக்காய்
இங்கே ஆற்றும் பணிகண்டு
எப்படி இவரைப் புகழ்வோமோ!
என்றே நாமும் ஏங்குகிறோம்.

109. எளிமை தன்னை ஏற்றம்என
என்றும் எண்ணி வாழுமிவர்
உளமே எம்மில் நிறைந்துள்ளார்.
உயர்வே நன்கு பெற்றுள்ளார்.

110. எழுதும் மாந்தரை ஏற்றமுற
ஏற்றிப் போற்றும் தன்மையினால்
அழகாம் தன்மை அத்தனையும்
அமைந்த மனிதர் என்றானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

111. பொறுமை தன்னைப் பொக்கிசமாய்ப்
பெரிதும் பற்றி நடக்கின்றார்.
சிறுமைத் தன்மை யாவையுமே
சிந்தை அகற்றி வாழ்கின்றார்.

112. தூரப் பார்வை துலங்குகிற
தன்மை மிகைத்தும் திகழ்கின்றார்.
ஆரம் என்றே தாய்மொழியை
அதிகம் உவந்து நடக்கின்றார்.

113. மனிதத் தன்மை எல்லாமும்
மிகைத்த மனிதர் என்றானார்.
இனிய பண்பு அனைத்தினதும்
இருப்பிடம் என்றும் இங்கானார்.

114. உள்ளத் தூய்மை என்பதிலும்
உயர்ந்த இடத்தில் இருக்கின்றார்.
கள்ளத் தனங்கள் அறியாத
கண்ணிய மனிதரும் என்றானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

115. கறையே படியாக் கரத்திற்கும்
காட்சி என்றே இவரானார்.
நிறைவாம் மாந்தர் என்பதற்கும்
நல்ல உதாரணம் ஆகிட்டார்.

116. சத்தியம் அவரின் செயலாகும்
சற்றும் நீதி பிசகாத
உத்தமர் என்றும் உயர்ந்திட்டார்
உன்னதம் பற்றி நடக்கின்றார்.

117. புன்னகை அவரின் வதனத்தில்
புகழிடம் ஆகித் திகழ்கிறதே!
நன்மை தன்னைப் பிறருக்கு
நாடும் நபராய் ஆகிட்டார்.

118. நல்லார் என்ற வார்த்தைக்கு
நன்கே இவரும் பொருந்திட்டார்.
பொல்லாத் தனங்கள் இல்லாத
புனிதர் என்றும் புலர்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

## (எண்சீர்)

119. அவுஸ்திரேலிய எழுத்தாளர் விழாவினிலே நிகழ்ந்த
அன்றையதாம் இலக்கியத்துக் கருத்தரங்கு தனுக்கு
உவப்புடனே தலைமையது தாங்கிட்ட பெருமை
உடையவராய் ஞானசேகரன் உள்ளதுவும் உணர்வீர்.

120. சர்வதேச எழுத்தாளர் மாநாடு தனுக்கு
சிறப்பான இணைப்பாளர் இலஙகைக்கு என்ற
நிர்வாக ஒழுங்குகளும் நேர்த்தியுடன் செய்தார்
நல்லபெரும் பணியாற்றி நற்புகழும் கண்டார்.

121. கொழும்பினது தமிழ்ச்சங்கம் நடத்திட்ட உலகக்
காத்திரத்தின் தமிழ்இலக்கிய மாநாடு இதனின்
அழகுமிகு இலக்கியக்குழுச் செயலாளர் என்றே
ஆனபணி அத்தனையும் அவராற்றி மகிழ்ந்தார்.

122. சென்னையதன் பல்கலையின் கழகத்தில் அவரும்
சிறப்புறவே ஆய்வுமாணவர் ஆனவர்க்கு உரையை
நன்றெனவே நடத்திட்ட நற்பேரும் பெற்றார்
நிகழின்றித் தமிழ்ப்பணியில் நீந்தியுமே நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

123. திருச்சியின் பாரதிதா(சன்) பல்கலைக்கழ கத்தில்
திறம்படவே ஆய்வுமாணவர்க்(கு) அறிவுரைகள் செய்தார்.
சிறப்புறவே தமிழுக்குச் சீர்பணிகள் செய்யும்
சிந்தைநிறை செம்மல்எனச் செப்பிடவே உயர்ந்தார்.

124. மதுரைதனின் தமிழ்நாடு தமிழ்மன்றம் நடாத்திய
மகத்தான ஈழத்துக் கருத்தரங்கில் இவரும்
இதமுடனே ஈழத்துப் போர்இலக்கியம் பற்றி
இன்தமிழின் உரைதன்னை இங்காற்றிச் சிறந்தார்.

125. சென்னையின் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன
சிறப்புநிறை அயல்நாட்டு தமிழ்இலக்கியம் பற்றிய
உன்னதமாம் கருத்தரங்கின் உயர்தலைமை நல்கி
உயர்வுற்ற மாந்தர்என உருவாகிப் போனார்.

126. முனைவர்எனும் கலாநிதிப்பட் டத்தினது ஆய்வை
மேற்கொள்ளும் நிலையினுக்கு ஞானமெனும் இவரின்
கனம்கொண்ட சஞ்சிகையும் கால்பதித்து உள்ள
கீர்த்திமிகு நிலைதனையும் கண்டிடுவீர் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

127. மானுடத்தின் தமிழ்கூடல் இலக்கியமா நாட்டில்
மேலான நாவல்அரங்(க) தலைமையெனத் திகழ்ந்த
ஆனபெரும் சிறப்புக்கும் அருகதையே என்று
ஆகிட்டார் இவருமென அறிவோமே நன்கு.

128. ஈரோடு கலைஅறிவியல் கல்லூரி தன்னின்
இனிதான பண்பாடு ஆய்வுக்கருத் தரங்கில்
சீராகப் பேசிட்ட செம்மலரும் ஆவார்
சிறப்புக்கும் இவர்நல்ல சொந்தமேதான் ஆனார்.

129. கோயம்புத் தூரினது சிபிகல்வி நிறுவன
காத்திரத்துத் தமிழ்ஞாயிறு நிகழ்உரையை நிகழ்த்தி
நேயமெலாம் பெற்றிட்ட நபராயும் உள்ளார்.
நற்றமிழின் பேறெனவே நாம்நவில்வோம் இவரை.

130. கனடாரொறன்(டோ) தமிழ்ச்சங்க நிகழ்வினிலும் இவரும்
கன்னித்தமிழ் வளர்வதற்குக் காத்திரஉரை செய்தார்.
தனதான பணியெல்லாம் தமிழென்றே வாழும்
தரமாந்தர் இவர்என்றும் தெளிவோமே நாமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

131. இலண்டனுடன் கனடாவென இலங்கும்நா டுகளில்
இனிதுறவே ஞானமெனும் சஞ்சிகையை அங்கு
துலங்குதற்கு வெளியிட்ட துடிப்பாள ருமாவார்.
தூயபெரும் தமிழ்ப்பணியில் திகழ்வோரும் ஆவார்.

132. தஞ்சாவூர் பல்கலைக்கழ கத்தில்தமிழ் இலக்கிய
தரமிக்க உரைதன்னைத் தான்நிகழ்த்தி அவரும்
விஞ்சியதாம் புகழுற்ற வளமாந்தர் ஆனார்.
வையகத்தில் இவர்சேவை வியப்பேதான் ஆகும்.

133. மத்தியதாம் மலைநாட்டில் மருத்துவராய் இவரும்
மிகநீண்ட காலங்கள் பணிசெய்துவந் ததனால்
வித்தகமாய் மலையகத்தை விளங்கிட்டார் நன்கு
விரிவான ஞானமதும் விஞ்சியதாய் ஆனார்.

134. இல்லறத்துச் சோலையிலும் இனிதுறவே இலங்க
இவர்ஞான லட்சுமிஎனும் யாழ்நகரின் மங்கையை
நல்லறத்து நங்கையென நாட்டமுடன் ஏற்றார்.
நல்வாழ்வின் நாயகராய் நன்றெனவே ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

135. ஆசிரியைப் பதவிதனை அலங்கரித்த இவரோ
அத்தொழிலில் ஓய்வதனை அடைந்தவராய் உள்ளார்.
நேசமிகு வாழ்வுக்கு நற்றுணையாய் ஆகி
ஞானசேகர னின்உயர்வில் நன்றெனவே உள்ளார்.

136. இவருடைய மனைவியரும் இன்னரும்எழுத் தாளர்
இதுவரையில் இந்துசமய இந்நூல்கள் பத்தை
உவப்புடனே வெளியிட்டு உன்னதமே பெற்றார்.
உலகினிலே இவர்புகழும் உயர்ந்திடுமே உண்மை.

137. இல்லறத்துப் பேறெனவே இனிதுறவே இவரும்
இருமகனை ஈன்றிட்டார் இவர்கள்தம் நாமம்
நல்லருமை இராஜேஸ்வரன் பாலச்சந்(திரன்) ஆவர்
நிலமீதில் நற்புகழாய் நிலைத்துள்ளார் தானே!

138. நல்லருமைப் புத்திரியாய் வசுந்தரா என்னும்
நங்கையவர் உள்ளதையும் நாம்நினைவில் கொள்வோம்.
வல்லோனாம் இறையோனின் அருள்பெற்ற நபராய்
விளங்குகிறார் ஞானசேகரனும் வளமுடனே புரிவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

139. இவருடைய புத்திரனாய் இலங்கும்பா லச்சந்(திரன்)
இலக்கியத்து ஆற்றலிலும் இனிதிடத்தே உள்ளார்.
உவப்புடனே பதின்ஒன்று நூல்களினை இந்த
உலகுக்கு அளித்தவராய் உன்னதமும் பெற்றார்.

140. பல்லரிய புகழ்ச்சிக்கும் பாத்திரமாய் ஆகி
பரிணமிக்கும் ஞானசேகரனைப் புரிந்திடுவீர் நன்கு.
நல்லபெரும் பெரியாராய் நம்மிடையே ஆன
நாயகராம் இவரைநாம் நன்றெனவே புகழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

## (புதுக்கவிதை)

141. ஞானசேகரனே!
உண்மையில் நீ
ஞானத்தின் சேகரமாகவே
ஆகிப்போனாய்.

142. உன்னில்
செந்தமிழ் ஞானங்கள்
களஞ்சியப்பட்டுள்ளன.

143. நீ...
அகவை ஆகியவன் ஆயினும்
கன்னித்தமிழ்
உன்னைக் காதலித்துக் கொண்டிருப்பதால்
இளமையாளனாகவே
இனம்காணப்படுகிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

144. உன் கல்லறையில் கூட
தமிழின் உயர்ச்சிக்காய்
தன்வாழ்வெல்லாம்
உழைத்துக் கொண்டிருந்த ஓர் உயிர்
இப்போது... இங்கே
ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறது
என்ற வார்த்தைதானே
பொறிப்பதற்குப் பொருத்தமாகிப் போகும்.

145. தமிழின் உயர்ச்சிக்கு
நீ செய்த தியாகங்களை எல்லாம்
அறிகின்றவர்கள்
அதிர்ச்சியில் ஆழ்ந்து போவர்.
இப்படியும் ஓர்மனிதர்
தமிழுக்காய் உழைத்தாரா? என்று
உணர்ச்சிப் பிரவாகம் செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

146. பயணங்கள் யாவும்
பொழுது போக்குகளாகவே
புலரும் உலகில்
உன் பயணங்கள் யாவும்
இலக்கியத்தின் இயம்பல்களாகவே
இங்காகிப் போயின.

147. உள்நாட்டு யுத்தங்கள்
வேதனைகளின் வேக்காடாய்
விளங்கப்பட்ட உலகில்
நீயோ!... அதனை
வருங்கால சந்ததிகளுக்கெல்லாம்
வரலாற்றுப் பாடமாய்
வடிவமைத்துக் கொடுத்தாய்.

148. ஆதலால்... இன்று
ஞானசேகரன் என்ற நாமம்
தமிழ் மொழியின் முகவரியாகவே
மொழியப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

149. தமிழின் வரலாற்றுப் பொக்கிஷமாய்த்
திகழும் நீ...
அதன் ஆய்வாளர்களின்
விளைவுகளில் எல்லாம்
என்றும்... அறுவடையாய்
ஆகிக் கொண்டிருப்பாய்.

150. இலக்கியவாதிகளை
இந்நாட்டில் அறிமுகப்படுத்திய
இதிகாசத்தின் இருப்பாகவே
இலங்கிக் கொண்டிருக்கிறாய்.

151. ஞானசேகரமே!
உன் பிறப்பு
செந்தமிழின் செழுமையின் பிறப்பாகவே
புரியப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

152. பல விருதுகளையும்
கௌரவிப்புகளையும்
நீ கண்டதாகக் கதைக்கப்பட்டாலும்
அவைகள்... உண்மையில்
உன்னைக் கண்டதனால்தான் உயர்வுற்றுப் போயின.

153. அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவரின்
அருமையை அறியப்படுத்திய நீ
தமிழ் முஸ்லிம் உறவுகளின்
ஊற்றாகவும் உணரப்படுகிறாய்.

154. ஈழத்தில் தமிழ்வளர்த்த
இமயம் என இயம்பப்படும் நீ
தமிழ் உள்ளவரைக்கும்
நாட்டில் நவிலப்பட்டுக்கொண்டேயிருப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

155. அமைதியை அதிகம்
ஆசிக்கும் நீ
நாட்டில்...
ஒற்றுமையின் ஓசையாகவும்
உணரப்படுகிறாய்.

156. கறைபடியாக் கரமுடன்
காட்சி நல்கும் நீ
நீதியின் களஞ்சியமாகவும்
நிலைபெற்றுள்ளாய்.

157. இன்றைய...
தமிழ் அரங்குகளில்
ஞானசேகரனின் உரை
அந்நிகழ்வின் உயர்ச்சியாகவும்
அதன் அங்கீகாரமாகவும்
அர்த்தமாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

158. கூடியதாம் கட்டுரைகளுக்கும்
கதைகள் நாவல்களுக்கும்
ஆசிரியனாக ஆகிப்போன நீ
பேரறிஞனாகவே பகரப்படுகிறாய்.
உன் நூல்களை
ஏந்தியவர்கள் கூட
அறிவால் ஆராதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

159. ஞானமிகு ஞானசேகரனே!
கூடியதாம் தமிழ் ஆய்வு மாநாடுகளுக்கு
தலைமை தாங்கும் தத்துவத்தால்
உன் ஆற்றலின் ஆளுமையையும்
செந்தமிழின் செழுமையையும்
தரிசிக்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

160. இன்றில்
நாளையைக் காணும்
தீர்க்கதரிசனப் பார்வைக்கும்
சொந்தக்காரனாகவே
சிங்காரம் பெற்றுள்ளாய்.

161. ஞானசேகரனே! நீ
தமிழ்ச் சோலையில்
பாய்ந்தோடும்
பசுமை நதியாகவே
பரிமாணம் பெற்றுள்ளாய்.

162. இன்று நாட்டில்
ஞானசேகரச் சோலையில்தான்
தமிழின் நறுமணம்
அதிகம் வீசிக்கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

163. என்றும்
சத்தியத்தின் சங்கமமாகிப்போன நீ
உண்மையின் உறைவிடமாகவும்
உணரப்படுகின்றாய்.

164. உன் காலநேரங்களை
தமிழின் செழுமைக்கு உரித்தாக்கியதால்
தமிழின் சமூகத்தின் மேன்மைக்கு
உரித்தாளனாகவே உணரப்படுகிறாய்.

165. ஞானசேகரன் எனும் உன்நாமம்
நாளைய உலகிலும்
நல்வாழ்த்துக்குரியதாய்
நிலைத்தோங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

166. இந்நாட்டில்
தமிழ் தழைத்தோங்கும்
ஒவ்வோர் பொழுதுகளிலும்
அங்கு
உன்பெயர் ஓங்கி ஒலிக்கப்படும்.

167. இன்று இந்நாட்டில்
ஞானசேகரன் எனும்
உன் நாமத்தை நீக்கிவிட்டு
தமிழ்மொழியின் உயர்ச்சியை
யாரும் உரைக்கவே முடியாது.

168. இன்று... நாட்டில்
தமிழுக்கோர் ஞானசேகரன்
எனும் ஓசை
உரக்க ஒலிக்கும் நிலையாச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

169. தமிழின் உணர்வை
மக்களின் உள்ளமெல்லாம்
ஒளிரச்செய்த பெருமைக்கும்
நீயேதான் பாத்திரமாய் இருந்துகொண்டிருக்கிறாய்.

170. உன் ஞானம் சஞ்சிகையின் மூலம்
பலநூறு எழுத்தாளர்களை
அடையாளம் கண்ட உன் பணி
எழுத்துலகின் ஏற்றம் என்றே
போற்றப்படும் பேறுபெற்றாய்.

171. தமிழ் கூறும் நல்லுலகம்
போற்றிப் புகழும் அளவுக்கு
பாரிய பணிபுரிந்த பெருமகனாய்ப்
புலர்ந்து கொண்டிருக்கிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு
### (எண்சீர்)

172. ஆயிரமாம் ஆண்டதுகள் ஆகிட்ட பின்பும்
அவருடைய தமிழ்ப்பணிகள் அதிசிறந்து வாழி!
நேயமுடன் அவர்சேவை நினைத்தேதான் மக்கள்
நன்றெனவே போற்றிவிட நிலமீதில் வாழி!

173. செந்தமிழும் நாட்டினிலே சிறந்தோங்கி வாழி!
செழுமையுற அதற்காக உழைப்போரும் வாழி!
நந்தவனம் எனத்தமிழை நயப்போரும் வாழி!
நிலம்மீதில் நிலைத்தோங்கி நனிசிறப்பாய் வாழி!

174. ஞானசேகரன் காவியத்தை நவில்வோரும் வாழி!
நன்றெனவே அவர்பெருமை நினைப்போரும் வாழி!
ஆனபெரும் அவர்பணிகள் அதிசிறந்து வாழி!
அவராலே தமிழ்மொழியும் அதியுயர்ந்து வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

175. ஞானசேகரன் நாயகியும் நன்றெனவே வாழி!
நற்புகழில் அவர்சேய்கள் நிலைத்தோங்கி வாழி!
ஆனபெரும் உய்வுற்று அருந்தமிழும் வாழி!
அதற்கான அவர்பணிகள் அதியுயர்ந்து வாழி!

176. இலக்கியத்தில் உயர்ந்தோங்கி இமயம்எனத் திகழும்
இன்னரியார் ஞானசேகரன் இனிதுறவே வாழி!
நலம்யாவும் பெற்றவரும் நிலமீதில் வாழி!
நீண்டபெரும் வாழ்வுற்று வாழியவே! வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியரின் வெளிவந்த ஏனைய நூல்கள்.

காவிய நூல்கள் :

1. நாயகக் காவியம் (மாகாண சாகித்திய விருது பெற்றது)
2. அஷ்ரஃப் அமர காவியம்.
3. தங்கத்துரைக் காவியம் (காத்தான்குடி முஸ்லிம் இயக்கங்கள் பள்ளிவாயல்கள் சம்மேளன விருது பெற்றது)
4. மஜீது மாகாவியம்.
5. மூதூர் முன்னேற்றக் காவியம் (மாகாண சாகித்திய விருது பெற்றது)
6. மூதூர் வாப்பு மரைக்கார் வழிக்காவியம்.
7. அமீன் அருங்காவியம்.
8. ஊர் துறந்த காவியம்.
9. மூதூர் சுனாமிக் காவியம்.
10. மூதூர் படகு மூழ்கிய காவியம்.
11. மனையாள் மாட்சிமைக் காவியம்.
12. செல்வா! சீர்மைக் காவியம்.
13. அக்பர் ஆளுமைக் காவியம்.
14. இம்தியாஸ் இதிகாசக் காவியம்.
15. கடலும் கண்ணீரும் – மூதூர் மீன்பிடிக் காவியம், மூதூர் வட்டத்துக் காவியம்.
16. கலாநிதி சஹாப்தீன் சங்கைமிகு காவியம்.
17. அறிஞர் அஸீஸ் அகம் நிறை காவியம்.

கவிதை நூல்கள்.

18. அமைதிப் பூக்கள்.
19. மனிதம்.
20. இஸ்லாமியக் குறள் (காத்தான்குடி முஸ்லிம் இயக்கங்கள் பள்ளிவாயல்கள் சம்மேளன விருது பெற்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. மழலைக் கீதம்.

22. யதார்த்தம்.

23. எந்தன் ஊரே!

24. வசந்தம்.

25. நண்பனை நவிலும் நா.

26. மூதூர் அனஸின் நன்னெறிக் குறள்.

27. சிறுவர் கவிப்பேழை.

தொகுப்பு நூல்கள்.

28. கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகள்.

29. மூதூர் உமர்நெய்னார் புலவர் கவிதைகள்.

30. கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கடிதங்களின் தொகுப்பு (அன்பின் மகனுக்கு).

மறுபதிப்பு நூல்.

31. மூதூர் உமர்நெய்னார் புலவரின் சீறாப்புராணம் – ஹிஜ்ரத்துக் காண்ட உரை.

கட்டுரை நூல்.

32. அதிமேதகு ஜனாதிபதிக்கு ஓர் மடல்.

ஆய்வு நூல்கள்.

33. கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகளில் தாய்மை உணர்வுகள்

34. கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகளில் தலைமைத்துவத் தகைமைகள்.

35. கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகளில் மூதூர் மீனவர்களின் உயர்ச்சி நாட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரைப்பற்றி



காப்பியக்கதிரேசன் முனைவர் முகைதீன் அனஸ் மூதூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பதற் கொப்ப தமிழ் இலக்கிய பரம்பரையில் நான்காவது தலைமுறையில் பிறந்தவராக உள்ளார். இவரின் முன்னோர்களாக மூதூரில் கங்கை காவியம் பாடிய புலவர் சாலயர் எனப்படும் முகையதீன் புலவர், மூதூரில் புஹாரிக்காவியமும், சீறாப்புராண ஹிஜ்ரத்துக் காண்ட உரை நூலும், யாத்த புலவர் உமர் நெய்னார், மூதூரில் கினாந்தி முனைக்காவியம் பாடிய கவிஞர் ஏம்.து.பரீது ஆகியோர்கள் காணப்படுகின்றனர்.

அத்துடன் இவரின் தகப்பனாராகிய முகம்மது முகைதீன் என்பவர் மாபெரும் கவிஞர். தமிழ் உலகில் பாரதிதாசன் போன்ற கவிஞருக்கு நிகரான ஆற்றலும், புலமையும் மிக்கவராகக் காணப்படுகின்றார்.

மேலும் நாட்டில் முஸ்லிம், தமிழ் அறிஞர்களினதும், பெரியார்களிலும் அதிக தொடர்புகள் நிறைந்தவராகவும் காணப்படுகின்றார். இலங்கை துறைமுக அதிகார சபையின் திருகோணமலை துறைமுக தொழில் உறவு அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வுப் பெற்றவர். இதுவரை சுமார் 35 க்கும் மேற்பட்ட காவியம், கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். இவருடைய இலக்கிய புலமையைக் கௌரவிக்கும் முகமாக, அமெரிக்க முத்தமிழ் பல்கலைக் கழகம் இலக்கிய கலாநிதி (முனைவர்) பட்டம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரின் இலக்கியப்பணிகள் மேலும் சிறந்தோங்கப் பிராத்திக்கிறேன்.

நன்றி

கவிஞர் எஸ்.எச்.ஜமைகம்
மூதூர்
02-01-2024

ISBN 978-624-99564-1-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org